# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 09 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2018. 03. 09 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## தண்டனைச் சட்டக்கோவை
## (திருத்தம்)

**(19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக் கோவையினைத்**
**திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நீதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

***வாசகம் 2*** : இவ்வாசகமானது (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக்குறிப்பீடு செய்யப்படும்). (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக் கோவையின் 75 ஆம் பிரிவினைத் திருத்துகின்றது என்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, எந்த வயதெல்லைக்கு கீழ் சிறுவர் ஒருவரின் தவறொன்றாகவிராதோ அந்த வயதெல்லையை அதிகரிப்பதற்கான தாகும்.

***வாசகம் 3*** : இவ்வாசகமானது முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, சிறுவர் தனது நடத்தையின் தன்மையையும் விளைவினையும் சீர்தூர்க்கிப் பார்ப்பதற்குப் போதிய விளக்க முதிர்ச்சி அடையாதவராக உள்ளார் என நீதிபதி அபிப்பிராயப்படின், எந்த வயதுக் கூறினுள் சிறுவர் ஒருவரின் செயல் தவறொன்றாகவிராதோ அந்த வயதுக் கூறினை அதிகரிப்பதற்கானதாகும்.

## தண்டனைச் சட்டக்கோவை
## (திருத்தம்)

ச.வ.- ஓ. 33/2016

### (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக் கோவையினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*1.* இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

*2.* (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 75 ஆம் பிரிவானது - 19 ஆம் அத்தியாயத்தின் 75 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

(1) "எட்டு வயதிற்குட்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பன்னிரண்டு வயதிற்குட்பட்ட" என்னும் சொற்களையும்; அத்துடன்

(2) ஓரக்குறிப்பில், "எட்டு வயதிற்குட்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பன்னிரண்டு வயதிற்குட்பட்ட" என்னும் சொற்களையும்,

இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*3.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவானது- முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) "எட்டு வயதிற்கு மேற்பட்டதும் பன்னிரண்டு வயதிற்குட்பட்டதும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பன்னிரண்டு வயதிற்கு மேற்பட்டதும் பதினான்கு வயதிற்குட்பட்டதும்" என்னும் சொற்களையும்; அத்துடன்

(2) ஓரக்குறிப்பில், "எட்டு வயதிற்கு மேற்பட்டதும் பன்னிரண்டு வயதிற்குட்பட்டதும்" என்னும் சொற்

களுக்குப் பதிலாக, ‘‘பன்னிரண்டு வயதிற்கு மேற்பட்டதும் பதினான்கு வயதிற்குட்பட்டதும்’’ என்னும் சொற்களையும்,

இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.